செய்தி வெளியீடு எண்: 667 நாள்: 15.09.2018

# செய்தி வெளியீடு

## மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களின் மதிப்பூதியம்

2010–2011ஆம் நிதியாண்டு வரை மனவளர்ச்சி குன்றியோர், பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்காக செயல்படும் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு 3,000/– ரூபாயாக வழங்கப்பட்டு வந்த மதிப்பூதியம், 2011–2012ஆம் நிதியாண்டில் 5,000/– ரூபாயாக உயர்த்தப்பட்டது. இம்மதிப்பூதியத்தினை 2012–2013ஆம் நிதியாண்டில் 10,000/– ரூபாயாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தி ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மாற்றுத் திறனாளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கீழ் உள்ள மனவளர்ச்சி குன்றியோர், பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்காக செயல்படும் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் சிறப்பு ஆசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களின் மதிப்பூதியத்தை 10,000/– ரூபாயிலிருந்து 14,000/– ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இவ்வாறு மதிப்பூதியம் உயர்த்தி வழங்கப்படுவதால், 1127 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்கள் பயன் பெறுவர். இதனால், அரசுக்கு ஆண்டொன்றிற்கு 5 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவாகும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9